www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் இடைப்பருவத்தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : 11A022

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. 8 x 1 = 8

1. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2. தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
இ) கடல் + அலை - உயிர் + மெய் ஈ) மண் + வளம் - மெய் + மெய்

3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
i) அ - மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ-தவறு, ஆ-சரி

4. முயலா - இலக்கணக்குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) வினைத்தொகை ஈ) தொழிற்பெயர்

5. கூற்று : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

6. துன்பப்படுபவர் ________.
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

7. காட்டின் மூலவர் யார்?
அ) சிங்கம் ஆ) புலி இ) சிறுத்தை ஈ) யானை

8. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2) அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா
3) வாடிவாசல் - இ) குறுந்தொகை
4) இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து
i) அ ஆ இ ஈ ii) ஆ ஈ அ இ iii) இ ஈ ஆ அ iv) இ ஈ அ ஆ

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 x 2 = 8

9. "பாயிரம்" பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

10. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. எதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
12. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
13. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?
14. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3 x 4 = 12**

15. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.
16. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
17. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
18. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
19. வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3 x 2 = 6**

20. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.*
    கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்
21. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
22. *எவையேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
    அ) ஈன்ற (அல்லது) ஆ) வருகின்ற
23. *எவையேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.*
    அ) உயர்ந்தோங்கும் (அல்லது) ஆ) புகழெனின்
24. *தமிழ்ப்படுத்துக.*
    அ) Earth Environment ஆ) Cultural Elements

**V. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக)** **2 x 5 = 10**

25. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

26. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

27. அ) 'உண்டால் அம்ம' - எனத்தொடங்கும் புறநானூறு பாடல்.
    ஆ) 'பொருட்டு' - என முடியும் குறள்

******

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : 11A022

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

14 x 1 = 14

பலவுள் தெரிக.

1. பாயிரம் இல்லது ________ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள்-மரபுக்கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு-சிறுகதை
   இ) யானை டாக்டர்-குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு-புதுக்கவிதை
3. காவடிச் சிந்துக்கு தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
4. துன்பப்படுபவர் ________.
   அ) தீக்காயம்பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
   இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
6. சரியான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) கல்வி அழகே அழகு | - | 1) தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைப்பாடல் |
| ஆ) இளமையில் கல் | - | 2) திருமந்திரம் |
| இ) துணையாய் வருவது தூயநற்கல்வி | - | 3) ஆத்திசூடி |
| ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | - | 4) திருக்குறள் |
| | | 5) நாலடியார் |

   அ) 2,3,4,1 ஆ) 3,4,1,2 இ) 5,3,2,1 ஈ) 4,1,2,5
7. மகிழ்ச்சியின் மைந்தூறும் போழ்து ________ நினை.
   அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
   இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை
8. ***இலக்கணக்குறிப்புத் தருக :*** மாநகர்
   அ) உரிச்சொல் தொடர் ஆ) உருவகம் இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை
9. 'சின்னச்சீறா' என்ற நூலை எழுதியவர்
   அ) உமறுப்புலவர் ஆ) கடிகை முத்துப் புலவர்
   இ) பனி அகமது மரைக்காயர் ஈ) நபிகள் பெருமான்

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10. கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்

ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்

இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்

ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப்பொருள்

11. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை

அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) இவை அனைத்தும்

12. பாரதி பெண்களுக்காகத் தமது எந்த இதழில் குறள் வெண்பா எழுதியுள்ளார்?

அ) சுதேசமித்திரன் ஆ) இந்தியா இ) சக்ரவர்த்தினி ஈ) கர்மயோகி

13. Classical language என்பதன் கலைச்சொல்

அ) மதிப்புக் கல்வி ஆ) கல்விக்குழு இ) செம்மொழி ஈ) பண்பாட்டுக் கூறுகள்

14. "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்னும் நூலின் ஆசிரியர்

அ) இந்திரன் ஆ) வால்ட் விட்மன் இ) கீட்ஸ் ஈ) பாப்லோ நெரூடா

பகுதி - II

பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

16. வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

17. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு எதிர்கொள்வதாகப் புறநானூறு கூறுகிறது?

18. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. சங்க காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

21. வரை என்னும் சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

பிரிவு - 3

குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.*

பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போகவேண்டும் மகிழ்ச்சி

23. *மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும் :*

வலி, வளி, வழி

24. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.*

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்

25. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

அ) மலிந்த ஆ) வைத்தார்

26. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*

அ) சிறுகோல் ஆ) மனையென

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



27. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(மதி, இதழ், கம்பு, வளை, சிலை, ஆழி)
அ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவே தான் ; ______
ஆ) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ______
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) அறிவில்லாதவன் ஆ) நஞ்சிருக்கும்
29. கலைச்சொல்லாக்கம் தருக.
அ) Culture ஆ) Book Review
30. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?

பகுதி - III

பிரிவு - 1 2 x 4 = 8

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.
31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. "எவல் மறுக்கும் சிறுவினை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" - உவமையைப் பொருளுடன் விளக்குக.
34. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

பிரிவு - 2 2 x 4 = 8

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.
35. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
37. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
38. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

பிரிவு - 3 3 x 4 = 12

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.
39. அ) சொல் பின்வருநிலையணியை விளக்குக. (அல்லது)
ஆ) பிறிதுமொழிதலணியை சான்றுடன் விளக்குக.
40. அ) பாலைத் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) பொருண்மொழிக் காஞ்சித் துறையை சான்றுடன் விளக்குக.
41. பின்வரும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாதில் வா[illegible] வெண்ணிலாவே!

- கவிமணி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

அ) சிறு துரும்பும் பல்குத்த உதவும் *(அல்லது)*

ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

43. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




Padasalai.Net

பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கும் மிகாமல் விடையளிக்கவும். 3x6=18

44. அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபு வழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுது.

*(அல்லது)*

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

பகுதி - V

குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

47. அ) "அம்ம வாழி ......." எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'யான்' என்று முடியும் குறட்பாவை எழுதுக.

******

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : 11A022

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

8 x 1 = 8

I. பலவுள் தெரிக.

1. 'தட்சிண மேரு' என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட கோயில் எது?
   அ) தாராசுரம் கோயில் ஆ) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில்
   இ) தஞ்சைப் பெரிய கோயில் ஈ) குற்றாலநாதர் கோயில்
2. 'ழ' என்ற பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது ; 'கவிதைக்கிரீடம்' என்று போற்றப்படுவது
   அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்
   இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை
3. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
   அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
4. 'இராசசிம்மேச்சுரம்' என அழைக்கப்பட்ட கோயில் எது?
   அ) சிதம்பரம் கோயில் ஆ) தஞ்சைப் பெரிய கோயில்
   இ) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் ஈ) கங்கை கொண்ட சோழபுரம் கோயில்
5. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எது?
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
6. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
7. பசுவய்யா என்ற புனை பெயரில் எழுதியவர் யார்?
   அ) ப.ஜீவானந்தம் ஆ) சுந்தரராமசாமி இ) சி.சு.செல்லப்பா ஈ) ஆத்மாநாம்
8. ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்
   அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 x 2 = 8

9. இந்திய கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
10. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
11. பாரதிதாசன் இயற்றிய காப்பியங்களைக் கூறுக.
12. தொடர் அமைத்து எழுதுக:
    அ) அன்றொருநாள் ஆ) நிழலிலிருந்து
13. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
14. சாழல் - விளக்கம் தருக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



3 x 4 = 12

III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.

15. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக்குறவஞ்சி கூறுவன யாவை?

16. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து எழுதுக.

17. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

18. கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?

19. "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

3 x 2 = 6

IV. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.

20. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சிற்பக் கலை. *(செய்தித் தொடராக்குக)*

21. *விடுபட்ட இடத்தில் அடுத்து வர வேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.*

சேரன் - வில், சோழன் _______, _______ - மீன்

22. *கலைச்சொல் தருக.*

அ) Documentary ஆ) Myth

23. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

அ) உண்டான் ஆ) ஆழ்க

24. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*

அ) உலகனைத்தும் ஆ) நீரோடை

2 x 6 = 12

V. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக)

25. அ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

*(அல்லது)*

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

26. அ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

*(அல்லது)*

ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

1 x 4 = 4

VI. அடிபிறழாமல் எழுதுக. (மனப்பாடச் செய்யுள்)

27. "சிற்றூரும்" எனத் தொடங்கும் "புரட்சிக்கவி" பாடல்.

******

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : 11A022

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி

பகுதி - I

மதிப்பெண்கள் : 90

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

14 x 1 = 14

1. தவறான இணையைத் தேர்வு செய்க.
   அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்
   ஆ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்
   இ) கடல் + அலை – உயிர் + மெய்
   ஈ) மண் + வளம் – மெய் + மெய்

2. சரியான விடையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| அ) கல்வி அழகே அழகு | - | 1. தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைப்பாடல் |
| ஆ) இளமையில் கல | - | 2. திருமந்திரம் |
| இ) துணையாய் வருவது தூய நற்கல்வி | - | 3. ஆத்திச்சூடி |
| ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | - | 4. திருக்குறள் |
| | | 5. நாலடியார் |

   அ) 2,3,4,1 ஆ) 3,4,1,2 இ) 5,3,2,1 ஈ) 4,1,2,3

3. பசுவய்யா என்ற புனை பெயரில் எழுதியவர் யார்?
   அ) ப.ஜீவானந்தம் ஆ) சுந்தரராமசாமி இ) சி.சு.செல்லப்பா ஈ) ஆத்மாநாம்

Padasalai.Net

4. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம்
   ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், இலட்சாதிபதி
   ஈ) றெக்கை, அங்ஙனம்

5. பொருத்துக :

| | | |
|---|---|---|
| அ) அடி அகரம் ஐ ஆதல் | - | செங்கதிர் |
| ஆ) முன் நின்ற மெய் திரிதல் | - | பெருங்கொடை |
| இ) ஆதிநீடல் | - | பைங்கூழ் |
| ஈ) இனமிகல் | - | காரிருள் |

6. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்
   அ) வானம் இடிந்தது
   ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது
   ஈ) வானம் என்பது பொய்யானது

7. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
   இ) பகுதி, விகாரம், சந்தி
   ஈ) பகுதி, விகுதி

8. ஒப்புரவு என்பதன் பொருள் ________.
   அ) அடக்கமுடையது
   ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது
   ஈ) செல்வமுடையது

9. ஒட்டுப் போடாத
   ஆகாயம் போல - இந்த
   உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது
   அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

11. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது?
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

12. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது ; கவிதைக் கிரீடம் என்று போற்றப்படுவது
அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

13. ஆக்கப் பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

14. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

15. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
16. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?
17. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
18. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் செல்கிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 2 = 4

19. தொழு உரம் என்றால் என்ன?
20. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்வி முறை குறித்து குறிப்பு வரைக.
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

Padasalai.Net

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 x 2 = 14

22. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
23. *பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.*
அ) கம்பெனி ஆ) சரித்திரம்
24. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
கலை, களை, கழை
25. *கலைச்சொல்லாக்கம் தருக.*
1. Earth Environment ஆ) Agreement
26. *புணர்ச்சி விதி தருக.*
அருவினை *(அல்லது)* மனையென
27. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?
28. *ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக.*
அ) துய்த்தல் ஆ) நன்னாடு
29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
வைகை *(அல்லது)* வேங்கை
30. *மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.*
அ) நிறைகுடம் ஆ) முதலைக்கண்ணீர்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
33. தாமஸிகம் என்றால் என்ன?
34. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?
38. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும். 3 x 4 = 12

39. அ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

*(அல்லது)*

ஆ) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

0. ***தமிழாக்கம் தருக.***

1) You must be the change you wish to see in the world.
2) Nobody can hurt me without my permission.
3) The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
4) An eye for an eye only ends up making the whole world blind.

***பின்வரும் பாடலைப் படித்து மையக் கருத்தை எழுதி, ஏற்புடைய மூன்று நயங்களைச் சுட்டுக.***

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதைமை யற்றிடும் காணீர்

\- பாரதியார்

பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

ஆ) குறிஞ்சித் திணையை விளக்குக

***பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து...***

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

*(அல்லது)*

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43. காதுகேளாதவருக்கான மாற்று வினா.

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நகரங்கள், சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வரலாற்றுக்கும், நிகழ்கால வாழ்விற்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் அவை துணை நிற்கின்றன. தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். அவ்வகையில் இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும், தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

வினாக்கள் :

1) பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?
2) தென் இந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படும் நகரம் எது?
3) நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன?
4) நாம் அறியவேண்டிய சிறப்புகள் யாவை?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

(அல்லது)

ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

4 + 2 = 6

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.

47. அ) அம்ம வாழி ......... எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.

ஆ) 'உண்ணின்' - என முடியும் திருக்குறளை எழுதுக.

******

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: 11A022

நேரம்: 3.00 மணி **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

1. "கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) காபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத
2. ஐந்து வேளாண்மை மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர்
அ) அழகிய பெரியவன் ஆ) மசானபுஃபுகோகா
இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) வால்ட் விட்மன்
3. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) முருகன் ஆ) பாரதிதசான் இ) அண்ணாமலையார் ஈ) பாரதியார்
4. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றே தான் ............ இக்கவிதையில் பயின்று வருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி
5. நிரையொன்றாசிரியத் தளை எனப்படுவது
அ) மாமுன்நேர் ஆ) காய் முன் நேர் இ) விளம்முன் நேர் ஈ) விளம் முன் நிரை
6. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து .......... நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை
7. கட்டடக்கலை என்பது உறைந்துபோன இசை என்றவர்
அ) ஷெல்ஸ் ஆ) பிரடிகா வொன்ஸ்லீவிங்
இ) கே.கோவிந்தசாமி ஈ) இரண்டாம் நரசிம்மவர்மன்
8. 'பசுவய்யா' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர்
அ) ப.ஜீவானந்தம் ஆ) சுந்தர ராமசாமி இ) சொரிமுத்து ஈ) பாரதியார்
9. கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம் பெற்ற மரபு
அ) பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்
10. Pseudonym - கலைச்சொல் அறிக.
அ) குடற்காய்ச்சல் ஆ) புனைபெயர் இ) சமத்துவம் ஈ) களிம்பு

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. கூற்று - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு

அ) கூற்று சரி, விளக்கம் தவறு
ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி
ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

12. அகிற்புகை - இலக்கணக் குறிப்பு தருக.

அ) எண்ணும்மை
ஆ) உம்மைத்தொகை
இ) ஆறாம் வேற்றுமைத்தொகை
ஈ) வினைத்தொகை

13. திருகுமுருகு என்பது

அ) தண்டை ஆ) காலாழி இ) சிலம்பு ஈ) பாடகம்

14. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்
ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளில் பேசுகிறேன்
இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்
ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு

Padasalai.Net

## பகுதி - II

### *பிரிவு - 1*

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** 3×2=6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. அகநானூற்றின் பிரிவுகளைக் குறிப்பிடுக.
18. செந்தூக்கு என்பது யாது?

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** 2×2=4

19. மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன?
20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

### *பிரிவு - 3*

**எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக:** 7×2=14

22. உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
23. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :* பொரி, பொறி
24. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:* கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
25. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :* பிண்ணாக்கு
26. [illegible]

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக: அ) மதில் மேல் பூனை ஆ) கானல் நீர்
28. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க : அ) வருடம் ஆ) உற்சாகம்
29. பகுபத உறுப்பிலக்கணம் தருக. (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) அ) துய்த்தல் ஆ) துஞ்சல்
30. புணர்ச்சி விதி தருக (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) அ) அரும்பொருள் ஆ) திருப்புகழ்

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக: 2×4=8**

31. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
32. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.
33. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
34. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

### பிரிவு - 2

Padasalai.Net

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக: 2×4=8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.
36. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
37. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள் ; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
38. தாமஸிகம் என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றினுக்கு மட்டும் விடை தருக: 3×4=12**

39. அ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

ஆ) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. அ) முல்லைத்திணை விளக்குக.

(அல்லது)

ஆ) பாடாண் திணை - சான்றுடன் விளக்குக.

புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

அ) அடிக்கவும் செய்யலாம் ; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் .............

ஆ) வண்டியையும் இயக்கும் ; பெரும் கப்பலையும் தாங்கும் .............

இ) அறிவின் பெயரும் அதுதான் ; அம்புலியின் பெயரும் அதுவேதான் ..............

ஈ) எலியும் நுழையும் ; எம்மாதர் கையும் நுழையும் ..............

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து திரண்ட கருத்தினை எழுதி ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

- பாரதியார்

43. தமிழாக்கம் தருக :

அ) Work while you work and play while you play.
ஆ) The Pen is mightier than the Sword.
இ) Knowledge rules the world.
ஈ) A picture is worth a thousand words.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 3×6=18

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) தாம் வாழ்ந்த கால கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

(அல்லது)

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்கு.

(அல்லது)

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

47. அ) "சிற்றூரும்" - எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.
ஆ) "படின்" - என முடியும் குறட்பாவை எழுது.

------------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : 11A022

## பொதுத்தமிழ்

: 3.00 மணி | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 x 1 = 14

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

ள் தெரிக.

படகரை நாட்டில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை

அ) நாரை ஆ) தூக்கனாங்குருவி இ) உள்ளான் பறவை ஈ) கழுகு

ரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) குண்டலப்பூச்சி - பாடகம்

ஆ) விரியன் - தண்டை

இ) திருகுமுருகு - சிலம்பு

ஈ) சாழல் - விளையாட்டு

கவிதையினைப் பேசுவது போல எழுதுவது தான் உத்தமம். அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை எனக் கூறியவர்

அ) மகாகவி பாரதியார் ஆ) இராசேந்திரன்

இ) எர்னஸ்ட் காசிரர் ஈ) வால்ட் விட்மன்

சாந்தி நிகேதனில் உள்ள மரம்

அ) சவேலி ஆ) ஜுதி இ) பியால ஈ) சேவுந்தி

Padasalai.Net

Sailor' என்பதன் தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) மாலுமி ஆ) ஆவணம் இ) ஒப்பந்தம் ஈ) இனக்குழு

செவ்வி' என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ) புதுமைப்பித்தன் ஆ) நர்த்தகி நடராஜ் இ) பிரபஞ்சன் ஈ) சி.சு.செல்லப்பா

ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல்

அ) அச்சம் ஆ) காய்ச்சல் இ) கப்பல் ஈ) தேர்தல்

ஐங்குறுநூறு நூலைத் தொகுத்தவர்

அ) பேயனார் ஆ) கூடலூர்கிழார் இ) மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஈ) பெருந்தேவனார்

'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்" - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை ________.

அ) சாமுவேல் பெப்பிசு ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) ஆனந்தரங்கர் ஈ) உ.வே.சா

கொல்க - என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) தொழிற்பெயர் ஆ) வினைச்சொல்

இ) எதிர்மறைத் தொழிற்பெயர் ஈ) வியங்கோள் வினைமுற்று

முரண்பாடான பல கருத்துகளை விளக்கவும் நிலைநாட்டவும் உதவுவது

அ) கட்டுரைப்போட்டி ஆ) பட்டிமன்றம் இ) பேச்சுப் போட்டி ஈ) இசைப் போட்டி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13. "எண்ணவலை பின்னும் மூளைச்சிலந்தி" - இதில் இடம்பெற்றுள்ள உருவகம் ______.
அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) நிறம்

14. ஒப்புரவு என்பதன் பொருள்
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3 x 2 = 6**

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" ?
- இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

17. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

18. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2 x 2 = 4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

20. "நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்" - என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக.** **7 x 2 = 14**

22. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

Padasalai.Net

23. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக :***
அ) செங்கயல் ஆ) மணிக்குளம்

24. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***
சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

25. ***சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :***
அறிவில்லாதவன்

26. ***ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.***
அ) அயர்ந்து ஆ) வருகின்ற

27. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.***
அ) காலங்காத்தால எந்திரிச்சு படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்
ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராம போவாது

28. ***மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக :***
எதிர்நீச்சல்

29. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :***
பொரி, பொறி

30. ***தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.***
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 x 4 = 8

31. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

32. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 x 4 = 8

35. "மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.

36. ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகளில் இடம்பெற்றுள்ள செய்திகளை விவரிக்கவும்.

37. மரபுவழிக் கல்வி முறைகளில் எவையேனும் இரண்டனை விளக்குக.

38. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

பிரிவு - 3

எவையேனும் மூன்றினுக்கு மட்டும் விடை தருக. 3 x 4 = 12

39. அ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

*(அல்லது)*

ஆ) உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40. அ) குறிஞ்சித் திணையைச் சான்று தந்து விளக்குக. *(அல்லது)*

ஆ) பொருண்மொழிக்காஞ்சி துறையை விளக்குக.

Padasalai.Net

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

*(அல்லது)*

ஆ) தன் கையே தனக்கு உதவி

42. தமிழாக்கம் தருக :

1. You must to the change you wish to see in the world.
2. Nobody can hurt me without my permission.
3. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
4. An eye for an eye only ends up making the whole world blind.

43. கீழ்க்காணும் வேர்ச்சொல்லை வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர் என மாற்றி எழுதுக. (ஒன்றனுக்கு மட்டும்)

தா (அல்லது) பாடு *(அல்லது)*

காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கரைப் புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே" மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் 'தமிழ்மாலை' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

***வினாக்கள் :***

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 6 = 18

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

*(அல்லது)*

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சை பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

*(அல்லது)*

ஆ) நர்த்தகி நடராஜன் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

அ) 'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) 'நன்று' என முடியும் குறளை எழுதுக.

******

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com